T THOOTHUKUDI Reg. No.:

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2024

## வகுப்பு - 11

காலம் : 3.00 மணி **பொதுத்தமிழ்** மதிப்பெண்கள்:90

### பகுதி - I

கொடுக்கப்பட்ட விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து எழுதுக. 14 x 1 = 14

1. காவடிச் சிந்துக்குத் தந்தை
அ) பாரதிதாசன் ஆ) முருகன் இ) அண்ணாமலையார் ஈ) பாரதியார்
2. துன்பப் படுபவர்
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர் இ) பொருளைக் காக்காதவர்
ஈ) நாவைக் காக்காதவர்
3. நேரொன்றாசிரியத் தளை எனப்படுவது ........
அ) காய்முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
4. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்
அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) அகநானூறு ஈ) ஐங்குறுநூறு
5. நேரடிமொழி எனப்படுவது
அ) எழுத்து ஆ) பேச்சு இ) இசை ஈ) கவிதை
6. ஒட்டுப்போடாத ஆகாயம் போல - இந்த
உலகமும் ஒன்றே தான் - இக்கவிதையில் பயின்று வருவது
அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி
7. பாண்டிச்சேரி ஆரோவில்லில் வாழ்ந்து வரும் கவிஞர்
அ) அழகிய பெரியவன் ஆ) இரா.மீனாட்சி இ) பிரமிள் ஈ) வில்வரத்தினம்
8. 'சேயோன் மேய மை வரை உலகம்' என உரைப்பது
அ) அகத்தியம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) தண்டியலங்காரம்
9. 'சலச வாவி' என்பதன் பொருள்
அ) தாமரைத் தடாகம் ஆ) அல்லித் தடாகம் இ) ஆறு ஈ) கடல்
10. 'ஈன்ற' இச்சொல்லுக்குரிய சரியான பகுபதப் பிரிவு முறை
அ) ஈன்+ற்+அ ஆ) ஈன்+ற இ) ஈன்+அ ஈ) ஈ+ன்ற
11. நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?
அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
12. பாரதி .......... இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.
அ) சுதேசமித்திரன் ஆ) இந்தியா இ) விஜயா ஈ) பாலபாரதி
13. அழகிய பெரியவனின் இயற்பெயர்
அ) சொக்கலிங்கம் ஆ) அரவிந்தன் இ) கவிராயர் ஈ) ஜெயமோகன்
14. பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.
அ) அ.முத்துலிங்கம் - யுகத்தின் பாடல்
ஆ) பவணந்தி முனிவர் - நன்னூல்
இ) சு.வில்வரத்தினம் - ஆறாம் திணை
ஈ) இந்திரன் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
அ) அ, ஆ ஆ) அ, ஈ இ) ஆ, ஈ ஈ) அ, இ

### பகுதி - II

#### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 2 = 6

15. காவடிச் சிந்து என்பது யாது?
16. பாயிரம் பற்றி நீவிர் அறியும் கருத்து யாது?
17. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பழமையான உரையாசிரியர் யாவர்?
18. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

www.Padasalai.Net www.TrbTnpsc.com



பிரிவு – 2


எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 2 = 4

19. பேச்சுமொழி எழுத்து மொழியைக் காட்டிலும் உணர்த்தி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது. ஏன்?
20. ஆனந்தரங்கரின் நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள அக்காலத் தண்டனைகள் எவை?
21. 'கோட்டை' என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?

பிரிவு – 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7 x 2 = 14

22. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?
23. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
    அ) நெருங்கின ஆ) மெலிந்து
24. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
    அ) பெருங்கல் ஆ) மனையென
25. வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.
    வித்தியா, சாகரம்
26. தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.
    classical language, weaver bird
27. மரபுப் பிழையை நீக்குக.
    மயில் கூவ, குயில் அகவ, கிளி பேசியது
28. பகுதி, விகுதி, இடைநிலைகளைப் பயன்படுத்திச் சொற்களை உருவாக்குக.




29. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றைத் தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
30. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
    கனை, கணை

பகுதி – III

பிரிவு – 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

31. காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது?
32. தொல்காப்பியம் – குறிப்பு வரைக.
33. மறுவிலாத அரசென இருந்த மாநகர் – உவமையைப் பொருளுடன் விளக்குக.
34. மருந்து, மருத்துவர், மருத்துவம் பற்றித் திருக்குறள் கூறுவன யாவை?

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2 x 4 = 8

35. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.
36. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீவிர் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.
37. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? விளக்குக.
38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3 x 4 = 12

39. உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
 சம்பாத்யம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
 தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்
கன்னலடா என்சிற்றூர் என்போன் உள்ளம்
 கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்
 சுதந்தரத்தால் பிற நாட்டைத் துன்புறுத்தல் – பாரதிதாசன்

41. அன்னை (அல்லது) செந்தமிழ் – ஏதேனும் ஒரு தலைப்பில் கவிதை எழுதுக.

42. தமிழாக்கம் தருக.

i) Winners don't do different things, they do things differently.
ii) Work while you work and play while you play.
iii) All that glitters is not gold.
iv) Blood is thicker than water.

43. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் (அல்லது) சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 6 = 18

44. அ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீவிர் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க. (அல்லது)

ஆ) தாம் வாழ்ந்த காலக்கட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீவிர் அறிவன யாவை? (அல்லது)

ஆ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

## பகுதி – V

47. அடிபிறழாமல் எழுதுக: 4 + 2 = 6

அ) உண்டால் அம்ம .... எனத் தொடங்கும் புறநானூறு பாடல்

ஆ) 'உணின்' என முடியும் குறள்.

------------

AMEER TUITION CENTRE
KAYALPATTANAM
PH: 9488005009

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com